Praise the Lord:

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். (எபே.1:3) என்று வேதம் சொல்கிறது.

கிறிஸ்து சொல்கிறார்:

நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்.(யோ.14: 20) என்ற வார்த்தையின்படியே,…

"நாம் கிறிஸ்துவிலும், கிறிஸ்து நம்மிலும் இருக்கிறதை நாம் அறிந்திருக்கிறோம்."

ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. (யோவான் 6:63) என்ற வசனத்தின்படி,

ஆவியாயும் ஜீவனாயும் உள்ள வசனத்தை அறிவதிலே நாம் வளர பிரயாசப்படுகிறோம்.

நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். (யோவான் 14:26) என்ற வசனத்தின்படி,

நாம் அறிந்த வசனத்தின்படி நாம் நடக்காதுபோதும்,
நாம் அறிந்த வசனத்தை நாம் மறக்கும்போதும்,
நமக்குள்ளே வாசம் செய்யும் ஆவியானவர் நமக்கு நினைப்பூட்டுகிறார்.

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் **நிலைத்திருந்தால்**, நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். (யோவான் 15:7) என்ற வசனத்தின்படி..

***அறிந்திருப்பது வேறு, அறிந்ததிலே நிலைத்திருப்பது வேறு.***

அறிந்த சத்தியத்திலே நாம் நிலைத்திருக்கும்பொழுது,…..

நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள். (யோவான் 15:8) என்று வேதம் சொல்கிறது.

இப்படி கிறிஸ்துவும், கிறிஸ்துவுடன் இருக்கும் பிதாவும், கிறிஸ்துவான வாரத்தையும், வார்த்தையை நினைவுபடுத்தும் ஆவியானவரும்…..நம்மோடு இவ்வளவு ஐக்கியமாக இருப்பதை நாம் அறிந்திருந்தும்,

ஏன் இந்த உலகமும் மனிதர்கள் சிந்தனைகளும் நமக்கு இடறலாக இருக்கின்றன????

உயிர்ப்பிக்கிற ஆவி நம்மோடு இருப்பதைப்போலவே,
ஒன்றுக்கும் உதவாத மாம்சமும் நம்மோடு இருக்கத்தான் செய்கிறது.

அந்த மாம்சத்தை கிறிஸ்துவின் சிலுவையிலே அறைந்துவிடு (கலா. 5:24) என்று நாம் அறிந்த வசனத்தை ஆவியானவர் நினைப்பூட்டினாலும் நம்மாலே மாம்சத்தை முழுமையாக மேற்கொள்ளமுடியவில்லையே…......................................................................

இப்படி நம் உள்ளத்திலே விசாரங்கள் (பலவித கவலைகளும்) பெருகினாலும்,
தேவனே நமக்கு ஆறுதலையும் கொடுத்து இம்மட்டும் வழிநடத்தி வருகிறார்.

அவருடைய ஆறுதலையும் ஆலோசனைகளையும் நாம் அறிந்து ஏற்றுக்கொள்ளும்போது, உலகத்தினாலும், மனித சிந்தனைகளினாலும் வரும் இடறல்களை நாம் மேற்கொள்ளமுடியும். அதுமட்டுமல்ல, இடறலைக் கொடுக்கும் அனைத்து மக்களுக்குள்ளும் கிறிஸ்துவின் இரட்சிப்பும் விளங்கவேண்டுமென்பதே நமது விருப்பமும் விண்ணப்பமுமாக இருக்கும். ஆமென்.

விருப்பத்தையும், செய்கையையும் நம்மிலே உணடாக்குகிறவருடைய வசனத்தை தியானிக்க, ஜெபிப்போம்.

## Let us pray. ..

தேவனுடைய சித்தம் என்றும் மாறாதது.

……எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்;

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

இரட்சிக்கப்பட்ட நாம், சத்தியத்தை அறிகிற அறிவை அடைந்து, அதிலே முடிவுபரியந்தம் நிலைத்திருந்தால், நாம் பெற்ற இரட்சிப்பு பூரணமடையும்.

இந்த சித்தத்தை ஆண்டவர் நம்மிலே நிறைவேற்ற, சகலவிதத்திலும் ஆசீர்வதித்திருக்கிறார்.

இந்த நம்முடைய ஆசீர்வாதம்,
ஆசீர்வதிக்கப்படாதவர்களைப் பார்த்து பெருமை பாராட்ட அல்ல.
நம்மைவிட அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டவர்களைப் பார்த்து பொறாமைப்படவும் அல்ல.

ஆசீர்வாதத்தைக் கொடுக்கிற பிதாவுக்கு மகிமையாக செயல்பட்டு, கிறிஸ்துவுக்கு சீஷராயிருப்போம்.

**சங்கீதம்/Psalms 67:1-2** (பக்கம் 709)

தேவனே, பூமியில் உம்முடைய வழியும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய், தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து, உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்.

தேவன், நமக்குக் கொடுத்த ஆசீர்வாதம் இப்படியாக பயன்பட வாஞ்சிப்போம்.

*மீண்டுமாக இன்னுமொருவர் அதேவசனத்தை வாசியுங்கள். …..*

தேவன் இரக்கத்தினாலே, நமக்குக் கொடுத்த ஆசீர்வாதம் இப்படியாக பயன்பட வாஞ்சிப்போம்.

*(நம்முடைய திறமையினாலே அல்ல. தேவனுடைய இரக்கத்தினாலே…)*

May God be gracious to us and bless us and make his face shine upon us, that your ways may be known on earth, your salvation among all nations. (NIV) …..God be merciful to us and bless us……(NKJV)

**மத்தேயு/Matthew 5:16 (பக்கம் 7)**

இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

Let your light so shine before men, that they may see your good works and glorify your Father in heaven. (NKJV)

*உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.*

*பழையஏற்பாட்டிலே,*

சங்கீதத்திலே வாசித்தோம் …*உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்.*

ஜீவஊற்று உம்மிடத்தில் இருக்கிறது; உம்முடைய **வெளிச்ச**த்திலே **வெளிச்ச**ம் காண்கிறோம். **சங் 36:9**

For with you is the fountain of life; in your light we see light.

உம்முடைய வசனத்தின் பிரசித்தம் **வெளிச்ச**ம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும். **சங் 119:130**

The entrance of Your words gives light; It gives understanding to the simple.

*புதியஏற்பாட்டிலே,*

உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. (யோவான் 1:9)

The true light that gives light to every man was coming into the world. (NIV)

அந்த மெய்யான ஒளியாகிய கிறிஸ்து நம்மிலே, நமக்குள்ளே வாசம் செய்கிறார்….

நம்மிலே வாசம் செய்யும் மெய்யான ஒளியான கிறிஸ்து சொல்கிறார்….

……உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

எங்களுக்குள்ளே வாசம் செய்யும் கிறிஸ்துவின் வெளிச்சம் மற்றவர்கள் முன்பாக பிரகாசிக்கட்டும்.

மீண்டுமாக **சங்கீதம்/Psalms 67:1-2**

தேவனே, பூமியில் உம்முடைய வழியும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய், தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து, உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்.

ஆண்டவர், நம்மேல் இரக்கம் வைத்து, நம்மை ஆசீர்வதித்து,
சத்தியமும் கிருபையும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் செய்கிறார். அவருடைய மெய்யான ஒளி……நம் முகத்தை பிரகாசிக்க வைத்துள்ளதற்காக ஸ்தோத்திரம்.

அவர் கொடுத்த இந்த ஆசீர்வாதங்கள் இந்த பூமியில் அவருடைய வழியும்,
எல்லா ஜாதிகளுக்குள்ளும் அவருடைய இரட்சணியமும் விளங்கும்படி,
நாங்கள் தேவனுக்காக பயன்படவும், பயன்படுத்தப்படவும்,
ஆவியானவர் எங்களுக்கு ஒவ்வொரு நாளும் நினைப்பூட்டி வழிநடத்தவாராக. ஆமென்.

*சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும்,*
*கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.*

For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross.

தேவனுக்குப்பிரியமானவர்களாகவும், தேவனுடைய பிரியத்தை செய்ய வாஞ்சிக்கிறவாகளாகவும் வாழ நம்மை மேலும் ஒப்புக்கொடுத்து கிறிஸ்து மூலமாக தேவனிடம் மன்றாட எழுந்து நிற்போம்.

## Let us Pray